17th August 1963]

தனியார்துறை மின்சார நிறுவனங்களை எடுத்தல்

*199 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் தனியாருக்குச் சொந்தமான மின்சார விநியோக நிறுவனங்களை மாநில மின்சார போர்டு எடுத்து நடத்த திட்டம் ஏதேனும் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது உத்தேசம் இல்லை.

திரு. க. ர. நல்லசிவம்: சமீபத்தில் அமைச்சர் அவர்கள் ஒரு இடத்தில் பேசும்போது இது போன்று நடவடிக்கை எடுக்கப் போவதாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். மூன்றாவது திட்ட காலத்திலாவது இந்த நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த மாதிரி லைசென்சீஸ் இடங்களில் எதை அவர்கள் விஸ்தரிக்க முடியவில்லை என்று சொல்கிறார்களோ அந்த இடங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக் கொண்டுவிட்டது. அதை அவர்கள் 'சரென்டர்' செய்து விட்ட காரணத்தால் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை. கேள்வி கேட்டிருப்பது சர்க்கார் ஏற்றுக்கொள்வதைப் பற்றியது. இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

பாலிடெக்னிக் (தஞ்சை மாவட்டம்)

*200 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தஞ்சை மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஒன்று ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், எப்போது எங்கே ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) There are already two Polytechnics in Thanjavur district and a request for another Polytechnic has been received. It is under examination.

Dam across Thoppayar.

*201 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state:

(*a*) the present stage of the scheme for the construction of a dam across Thoppayar near Thoppur in Salem district;

(*b*) if so, the amount remitted by the Pattadars so far; and

(*c*) whether the Government propose to refund the amounts or to construct the dam in the near future?

THE HON. SRI V. RAMIAH: (*a*) It has not been found feasible to include the Thoppayar scheme in the Third Five-Year Plan;

[17th August 1963

(b) A sum of Rs. 8,100 has been collected from the ryots of Dharmapuri taluk towards betterment levy for the Thoppayar Project;

(c) There is no possibility of taking up the scheme in the near future. The question of refunding the amount is under consideration.

Supply of milk powder for schools.

* 202 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government are aware that milk powder and other articles supplied to the schools by CARE organisation have been misused and sold by some of the schoolmasters ;

(b) if so, whether any action has been taken by the Government to detect such cases ; and

(c) the number of cases that have been detected so far and the action taken thereon ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The Government are aware of a few cases of abuse.

(*b*) & (*c*) A statement [a] is placed on the Table of the House.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இது சம்பந்தமாகப் பல கேஸ்கள் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் மேஜையின் மேல் வைக்கப்பட்ட லிஸ்டில் சில மட்டுந்தான் காணப் படுகின்றன. இந்தமாதிரித் தவறுகள் ஏற்படாதவாறு சி.ஐ.டி. போலீஸ் வைத்து அரசாங்கம் கண்காணிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 22,240 பள்ளிக்கூடங்களில் 'கேர்' அட்மினிஸ்ட்ரேஷன் சார்பில் பால் பவுடர், மற்றவை எல்லாம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அது பொதுவாக நல்ல முறையில் நடந்து வருகிறது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சில இடங்களில் தவறுகள் நடக்கலாம். "Madras Gift Goods Unlawful Possession Act" என்ற சட்டம் 1962-ஆம் ஆண்டில் நிறைவேற்றி இருக்கிறோம். அந்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதிரித் தவறுதல் அதிகமாக ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல.

புலவர் கா. கோவிந்தன் : மூன்றாவது பிரிவில் 'கணத்தூர்' என்ற ஓர் ஊர் இருக்கிறது. அப்படி ஓர் ஊர் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அது களத்தூர், குளத்தூர் அல்லது குன்றத்தூர் என்று இருக்கலாமா ? அந்த வழக்கு எப்போது முடிவு அடையும்; அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே போட்டிருக்கும் பெயரைத் தவிர வேறு தகவல் இல்லை. மேலும் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் எடுத்துக் கொள்கிறேன். இதிலே ஏற்பட்ட தவறுதல்களுக்காகச் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

---

[a] Printed as Appendix III on pages 370–371 infra.